நாகை மாவட்டம் கீழ்வேளூர் பேரூர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் உரையாற்றினார். உடன் மாநில பிரச்சார குழுச் செயலாளர் சேலம் சுஜாதா, தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சயலிங்கம் மற்றும் வாசுகிநாகராஜன், இந்திராகாந்திசேகர், ஏ.எஸ்.என்.ராஜா மற்றும் பலர் உள்ளனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் அரசு ஆண்கள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் வீரராகவராவ் மண்டல பயிற்சித் துறை இணை இயக்குனர் முஸ்தபா, தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் லீமா ரோஸ், நிலைய மேலாளர் குழு தலைவர் நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை! முதல் பக்கத் தொடர்ச்சி

'திராவிடம்' என்ற சொல் ஒருகாலத்தில் இடத்தின் பெயராக, இனத்தின் பெயராக, மொழியின் பெயராக இருந்தது. இன்று அது ஒரு அரசியல் கோட்பாட்டின் பெயராக இருக்கிறது. இதனைத்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி வருகிறார்கள். 'திராவிடம்' என்ற அரசியல் கோட்பாட்டு வடிவம் என்பது பண்டித அயோத்திதாசர் , சர்.பிட்டி. தியாகராயர், டாக்டர் நடேசனார், டி.எம்.நாயர், தந்தை பெரியார், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா, பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், தமிழினத் தலைவர் கலைஞர் போன்றவர்களால் கடந்த நூறு ஆண்டுகளாக வளர்த்தெடுக்கப்பட்ட அரசியல் கருத்தியல் ஆகும்.

'சாதி பேதமற்ற திராவிடர்காள்' என்று அழைத்தவர் பண்டித அயோத்திதாசர். தமிழ் என்பதே அதனை உச்சரிக்க முடியாதவர்களால் 'திரமிள' எனத் திரிந்து அழைக்கப்பட்டது என்பது மொழியியல் அறிஞர்கள் கருத்து. எனவே தான் தமிழ் திராவிடம் என்பதை ஒரே பொருள் தரும் இருவேறு சொற்களாக பயன்படுத்தினார் தந்தை பெரியார்.

எங்கே பிரிவினை?

இத்தகைய திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் என்பவை, சுயமரியாதை, சமூகநீதி, சமதர்மம், மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி, இந்தியக் கூட்டாட்சி ஆகும். இதனை உள்ளடக்கியது தான் 'திராவிட மாடல்'ஆட்சியியல் கோட்பாடு ஆகும். தனது ஆட்சியின் நெறிமுறையாக இதனை வடித்துக் கொடுத்து செயல்படுத்தி வருகிறார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். 'எல்லார்க்கும் எல்லாம்' என்பதுதான் தனது இலக்காக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு வருகிறார்கள். இதில் பிரிவினை எங்கே இருக்கிறது?

திராவிட மாடல் ஆட்சியின் அனைத்து சட்டமும், திட்டமும் அனைத்து மக்களுக்கும் பொதுவானதே தவிர, யாரையும் வேறுபடுத்தி பாகுபடுத்தி பார்ப்பவை அல்ல. கோடிக்கணக்கானவர்களுக்கு இலட்சக்கணக்கானவர்களுக்கு நன்மை தரும் திட்டங்களைத் தான் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைவரும் சூத்திரர்கள் என்ற கருதுகோளை விதைத்தது மனு நூல். அதன் 10ஆவது அத்தியாயம் 44ஆவது சூத்திரத்தில் தமிழகம் என்பது திராவிடம் என்றே அழைக்கப்படுகிறது. "பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம்போசம், யவநம், சகம், பரதம், பால்ஹீகம், சீநம், கிராதம், தநதம், கசம் இத்தேசங்களை யாண்டவர்களனைவரும் மேற்சொன்னபடி சூத்திரராய்விட்டார்கள்" என்கிறது மனு.

எது தமிழர்களைக் கொச்சைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட சொல்லோ, அதனையே அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தியது திராவிட இயக்கம். இத்தகைய திராவிட இயக்கமானது கடந்த நூறு ஆண்டு காலமாக, தமிழ்நாட்டின் எழுச்சிக்கும் மீட்சிக்கும் உணர்ச்சிக்கும் உயர்வுக்கும் அடித்தளம் அமைத்துவிட்டதே என்ற கோபத்தில் திராவிடம் என்ற சொல்லின் மீது தனது காழ்ப்புணர்ச்சியைக் காட்டி வருகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

அவருக்கு 'தமிழ்நாடு' என்ற சொல் பிடிக்கவில்லை. அதற்காக, தமிழ்நாடு என்ற மாநிலத்தின் பெயரை மாற்றிக் கொள்ள முடியாது. அவருக்கு 'திராவிட இயக்கம்' பிடிக்கவில்லை. அதற்காக திராவிடம் என்ற சொல்லை நாங்களும் மாற்றிக் கொள்ளப் போவது இல்லை. அடுத்து என்ன செய்யப் போகிறார் ஆளுநர்?

குடைச்சல் தருகிறார்!

ஆளுநராக வந்தவர், இந்த மாநிலத்துக்கு ஆக்க பூர்வமாக ஏதாவது செய்திருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை. தினமும் ஏதாவது புலம்பிக் கொண்டு இங்குள்ள அரசியல் களத்தை குழப்ப முயற்சித்து வருகிறார். ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குக் குடைச்சல் ஏற்படுத்தி வருகிறார். சனாதன வர்ணாசிரம சக்திகளுக்கான திண்ணைப் பிரச்சாரக் களமாக ஆளுநர் மாளிகையை மாற்றிக் கொண்டு வருகிறார்.

'ஆளுநர் பதவி என்பது மாநில அரசு நிர்வாகத்தின் ஓர் அங்கம்' என்பதை மறந்து அரசுக்கு எதிரானவர்களோடு சேர்ந்து சதியாலோசனை மண்டபமாக, கிண்டி மாளிகையைப் பயன்படுத்தி வருகிறார். கடந்த அரை நூற்றாண்டாக அரசியல் களத்தில் இருந்து துடைத்தெறியப் பட்ட ஆரிய அரசியல் சக்திகள், தங்களது சாயம் போன சனாதனப் புத்தகங்களுக்கு ஆர்.என்.ரவியை வைத்து புதிய பொழிப்புரை எழுத வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கவலை இல்லை!

எந்த அவதாரம் போட்டு வந்தாலும் ஆரிய மாயையை அடையாளம் காணும் பேரறிஞர் அண்ணாவின் தம்பிகள் நாங்கள். முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகள் நாங்கள். ஆர்.என்.ரவியின் அன்றாடப் புலம்பல்கள் பற்றி எல்லாம் எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. அவரை நாங்கள் பொருட்படுத்தவே இல்லை என்பது தான் உண்மை.

'ஆளுநர் எங்களுக்கு பிரச்சாரக் கருவி தான். இங்கே இருந்து அவரை மாற்றி விடக் கூடாது. அவர் இருந்தால் தான் நம் முடைய கொள்கைகளை நாம் வளர்க்க முடியும்' என்று முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். திராவிட இயக்கத்தின் கொள்கைகள் தமிழ்நாட்டு மக்கள் மனதில் பட்டை தீட்டப்பட்ட வைரமாக மின்னுவதற்கு நாள்தோறும் தொண்டாற்றி வரும் ஆளுநர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

சென்னை – செங்கற்பட்டு – காஞ்சிபுரம் – திருவள்ளூர் – வேலூர் – திருவண்ணாமலை – விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள பேரவை நிர்வாகிகள் – செயற்குழு – மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

தொ.மு.ச.பேரவை அறிவிப்பு

மத்திய தொழிற்சங்க அமைப்புகள், தொழில்வாரியான தொழிற்சங்க அமைப்புகள், இதர தொழிலாளர் அமைப்புகள் ஜனவரி 30 அன்று தலைநகர் புதுடெல்லியில் கூடி எடுத்த முடிவின் அடிப்படையில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத – ஜனநாயக விரோத – தொழிலாளர் விரோத போக்குகளைக் கண்டித்து **ஆகஸ்ட் 9 அன்று மாநிலத் தலைநகரங்களில் "பெருந்திரள் அமர்வு"** நடத்துவதென எடுக்கப்பட்ட முடிவினை நடைமுறைப்படுத்திட **சென்னை, செங்கற்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்** மற்றும் **கடலூர் மாவட்டங்களில் உள்ள பேரவை நிர்வாகிகள், பேரவைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கவுன்சில் தலைவர், செயலாளர், பொருளாளர்** ஆகியோர் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் சென்னை **தொ.மு.ச. பேரவை தலைமையகமான "கலைஞரகத்தில்" 02.08.2023 அன்று காலை 10 மணியளவில் பேரவைப் பொருளாளர் திரு. கி.நடராசன்** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: "ஆகஸ்ட் 9 பெருந்திரள் அமர்வு"

மு.சண்முகம், எம்.பி.
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை

ஈரோடு மாவட்டத்தில் ரூ.6.33 கோடி மதிப்பீட்டில்

13,140 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

அமைச்சர் சு.முத்துசாமி தகவல்!

ஈரோடு, ஆக. 2 -

ஈரோடு மாநகராட்சிக் குட்பட்ட அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் ஆட்சியர் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மனிஷ், தலைமையில், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம் முன்னிலையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் 1012 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

அதுபோது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கூறியதாவது...

முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை முதல மைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். நமது மாவட்டத்தை சார்ந்த மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் சிக்கய்யநாயக்கர் கல்லூரியில் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் வகையில் உலகத்தரம் வாய்ந்த உள் விளையாட்டு அரங்கமும், பொது அறிவினை வளர்த்திக் கொள்வதற்காக சென்னை, மதுரை போன்ற இடங்களில் அமைந்துள்ளதை போல் மிகப் பெரிய அளவிலான நூலகமும் மற்றும் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்காக போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்களும் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் எதிர்காலத்திற்கான சிறப்பு மிக்க திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், இல்லம் தேடி கல்வி திட்டம் மற்றும் பெண்களின் உயர் கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் அரசு பள்ளியில் 12ஆம் வகுப்பு முடித்து கல்லூரிகளில் சேரும் மாணவியர்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் வகையில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. இதில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 127 அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 5,550 மாணவர்கள் மற்றும் 7,590 மாணவியர்கள் என மொத்தம் 13,140 எண்ணிக்கையில் ரூ.6,33,23,400 மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட உள்ளது.

அதன்படி, ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 195 மாணவியர்களுக்கும், கலைமகள் கல்வி நிலையம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 361 மாணவியர்களுக்கும், ஈரோடு கருங்கல்பாளையம் நகர மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 222 மாணவியர்களுக்கும், செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 162 மாணவர்களுக்கும் மற்றும் ஈரோடு கருங்கல்பாளையம் காமராஜர் நகர மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 72 மாணவர்களுக்கும் என 1012 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.48,49,880 மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி இத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் கல்வி கற்று தங்களது பெற்றோருக்கும் மற்றும் தங்களது பள்ளிக்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனவும் மாணாக்கர்களின் நலனுக்காக அரசு அளிக்கின்ற திட்டங்களை நல்ல முறையில் பெற்றுக் கொண்டு பயன் பெற வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், முதன்மை கல்வி அலுவலர் குழந்தைராஜன்;, மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் சசிகுமார் ப.க..பழனிசாமி, சுப்பிரமணியம், தண்டபாணி, மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் கஸ்தூரி, பள்ளி தலைமையாசிரியர் சுகந்தி, மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

சேலம் மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் மீது ஜெயலலிதா ஆட்சியில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு டவுன் போலீசார் .வி சம்பத், பூலாவரி, எஸ்.சேகர், அருள்மணி, வி.சேகர்,.ராஜேந்திரன், கே.என்.பி. நல்லதம்பி உட்பட 18 பேர் மீது வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த மகளிர் விரைவு நீதி மன்றம், குற்றம் நிருபிக்கப் படாததால் 18 பேர்களையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.கோரிக்கையை ஏற்று

நாமகிரிப்பேட்டை அரசு மகளிர் மேல் நிலை பள்ளியில் புதிய பாடப்பிரிவுகள்!

அனுமதி வழங்கிய முதலமைச்சருக்கு பொதுமக்கள் நன்றி!

நாமக்கல், ஆக. 2 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் மேல் நிலை பிரிவில் சுமார் 250 மாணவியர் பயின்று வருகிறார்கள். இவர்கள் அனைவரும் ஏழை, எளிய மாணவியர் ஆவார்கள். நாமகிரிப்பேட்டை மற்றும் அதனை சுற்றி உள்ள கிராம பகுதியில் இருந்து வந்து கல்வி பயின்று வருகிறார்கள். இப்பள்ளியில் மேல்நிலை பிரிவில் அறிவியல் பாடப் பிரிவுகள் மட்டும் செயல்பட்டு வந்தன. மாணவியர், பெற்றோர்கள், தலைமை ஆசிரியர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் இப்பள்ளியின் மேல்நிலை பிரிவில் கலைப் பிரிவுகள் துவங்கிட வேண்டி நீண்ட நாட்களாக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இது குறித்து மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான கே.ஆர்.என் இராஜேஸ்குமாரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

இதனை உடனடியாக பரிசீலித்த கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு பள்ளிக்கல்வி துறை அமைச்சர், தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்க உயர் அதிகாரிகளின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இதனை உடனடியாக ஆய்வு செய்த தமிழ்நாடு முதலமைச்சர், பள்ளிக் கல்வி துறை அமைச்சர், வனத்துறை அமைச்சர் ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று மாணவியர் நலன் கருதி இக்கல்வி ஆண்டு முதலே (2023-24) நாமகிரிப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கலைப் பிரிவில் இரண்டு புதிய பாடப்பிரிவுகளை துவங்கிட அனுமதி அளித்துள்ளனர்.

இதனையடுத்து விரைவாக நடவடிக்கை மேற்கொண்ட தமிழ்நாடு முதல்வர், பள்ளிக்கல்வி துறை அமைச்சர், வனத்துறை அமைச்சர் மற்றும் பள்ளிக் கல்வி துறை உயர் அதிகாரிகளுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் நன்றி தெரிவித்து உள்ளார்.

பொதுமக்கள், மாணவியர், பெற்றோர்கள், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தமிழ்நாடு அரசுக்கும், போர்க்கால நடவடிக்கை மேற்கொண்ட மாநிலங்களவை உறுப்பினருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு கனிம நிறுவனம்
எண்.31, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை-600005.
தொலைபேசி: 044-29862018, 28511972

இ–ஒப்பந்தப்புள்ளி அழைப்பதற்கான – அறிவிப்பு

1	ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் விபரம்	டாமின், எண்ணூர், தரமணி, தொழிற்சாலைக்கு தனல் கோணல்பகள் கொள்முதல் செய்தல்	ஸரிகரு பததி-II மேல்பிரிவு குவாரியில் கற்துண்டங்களை பிரித்தெடுத்தல் மற்றும் உற்பத்தி செய்தல்
2	ஒப்பந்தப்புள்ளி கோப்பு எண் / தேதி	**1046/IU-1/2023,** நாள்.25.07.2023	**1083/P2/20203,** நாள்.27.07.2023
3	ஒப்பந்தப்புள்ளி ID எண்.	**2023_TNMIN_352082_1**	**2023_TNMIN_325152_1**
4	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்	16.08.2023, மாலை 05.00 மணி	16.08.2023, மாலை 5.00 மணி
5	தொழில்நுட்ப உறை திறக்கும் நாள்	18.08.2023, மாலை 04.00 மணி	18.08.2023, மாலை 04.00 மணி
6	ஒப்பந்தப்புள்ளி பதவுத் தொகை / EMD இணைய வழியாக செலுத்த வேண்டும்	ரூ.1,000/- ரூ.69,600/-	ரூ.1,000/- ரூ.59,000/- வகை (System) ஒன்றுக்கு

குறிப்பு: மேலும், விபரங்களுக்கு Tamil Nadu e-Tendering portal **https://tntenders.gov.in** / **www.taminigranites.com** என்ற இணையதளத்தினை பார்வையிடவும்

செ.எ.நெ.அ/4174/ஒப்பந்தப்புள்ளி/2023

பொதுமேலாளர்(நிதி)

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் மன்னம்பந்தல் ஊராட்சி அச்சுதராயபுரத்தில் ஜெயராஜ், மகாலட்சுமி, சின்னப்பிள்ளை, சாந்தி, பாலசுப்பிரமணியன், தனலெட்சுமி ஆகிய 6 பேர் வீடு திடீர் தீவிபத்தில் எரிந்து முழுவதும் சேதம் அடைந்ததை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் ப.முருகமணி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மண்ணச்சநல்லூர் அரசு மகளிர் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 416 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றியத் துணைப் பெருந்தலைவர், பேரூராட்சித் தலைவர், கவுன்சிலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.